# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்ட மாணிப் பரீட்சை, வருடம் I – 2018

# இலங்கையின் சட்ட முறைமை

(மூன்று மணித்தியாலம்)

**வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07**

**நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

1. "அந்நிய சட்டங்களினால் இலங்கை செல்வாக்கிற்குள்ளாகி இருந்தபோதிலும், வழக்காற்றுச் சட்டங்களினூடாக தொன்மையான பாரம்பரியத்தை இலங்கையின் சட்டமானது இன்னும் உறுதியாகப் பாதுகாத்து வருகின்றது. அதன்விளைவாக, இலங்கையின் சமூகத்தில் பல்வேறு சட்டங்களுடன் இடைத்தொடர்பொன்று காணப்படுகின்றது."

   ஒரு நாட்டின் பன்மைத்துவச் சட்ட முறைமையொன்றினது, அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் என்பவற்றின் பின்னணியில் இலங்கையுடன் விசேடமாகத் தொடர்புபடுத்தி மேலுள்ள கூற்றினை ஆராய்க. உமது விடையானது அரசியலமைப்பின் பொருத்தமான ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்கள் என்பவற்றினால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

2. இலங்கையின் தற்போதைய நீதிமன்ற முறைமையானது இலங்கையின் புராதன நீதிமன்ற முறைமையின் பண்பியல்புகளை மாத்திரமன்றி, காலனித்துவ நீதிமன்றக் கட்டமைப்பினையும் பிரதிபலிக்கின்றது. ஆயினும், தற்பொழுது இந்த நாட்டிலுள்ள நீதிமன்ற முறைமையானது தெளிவாக வரையறுக்கப்பட்ட நியாயாதிக்கங்களைக் கொண்ட அகல்விரிவானதொன்றாகும்.

   பல்வேறு நியாயாதிக்கங்களைக் கொண்ட முதனிலை நீதிமன்றங்கள் மற்றும் மேன்முறையீட்டு நியாயாதிக்கமுடைய நீதிமன்றங்கள் என்பவற்றைக் குறிப்பிட்டு மேலுள்ள கூற்றின் மீது கருத்துரை செய்க.

3. “சுதந்திரத்துக்குப் பிந்திய காலப்பகுதியானது உரோம டச்சுச் சட்டத்துக்கு புத்துயிர் வழங்கியிருப்பதுடன், தனியார் சட்டத்தில் மேலாதிக்கங்கொண்ட முறைமையொன்றாக, நியதிச்சட்ட மாற்றங்களுக்கு மாத்திரம் உட்பட்டு, மீளத்தோற்றம் பெற்று வந்திருக்கின்றது.”

(Prof. Savitri Goonesekere, ‘The Roman Dutch Law in the Plural Legal System of Sri Lanka’, *The Colombo Law Review*, Vol.9, 1998, at p.30)

இலங்கையின் சட்ட முறைமையில் உரோம டச்சுச் சட்டத்தின் வகிபங்குடன் தொடர்பான மேலுள்ள கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? பொருத்தமான தீர்ப்புச் சட்டங்கள் மற்றும் நியதிச்சட்ட ஏற்பாடுகள் என்பவற்றினால் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

4. “உரோம டச்சுச் சட்டத் தீங்கியலுக்கு நிச்சயமாகவே அந்நியமான, நிலைமாற்றல் தீங்கு (*Tort of Conversion*) என்பது எமது சட்ட முறைமைக்குள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா இல்லையா என்ற பிரதிபயன் தொடர்பிலான வினா எழுகின்றது. இலங்கையின் சட்டத்துக்குள் அத்தகையதொரு சட்டமானது, ஒன்றில் நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அது தொடர்பிலான முறிவடையாததொரு தொடர்ச்சியான நீதிமுறைத் தீர்ப்புக்கள் ஆகிய இரண்டு வழிமுறைகளினால் அதனைச் சட்டமொன்றாக அங்கீகரிப்பதாக இலங்கைக்குள் அது அறிமுகப்படுத்தப்படலாம்.”

(Alles J. *Lily de Costa v. Bank of Ceylon* (1969) 72 NLR 457 in at 493)

நியதிச்சட்டத்தின் கீழ் இலங்கைச் சட்ட முறைமைக்குள் ஆங்கிலச் சட்டத்தின் கூட்டிணைப்புச் செய்வதன் பல்வேறு முறைமைகளை மேலுள்ள கூற்றின் பின்னணியில் ஆராய்க. பொருத்தமான தீர்ப்புச் சட்டங்கள் மற்றும் நியதிச்சட்ட ஏற்பாடுகள் என்பவற்றினால் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

5. **(அ)** மற்றும் **(ஆ)** ஆகிய இரண்டிற்கும் விடை தருக.

   **(அ)** இலங்கைக்குள் பிரயோகிக்கப்படுகின்ற முஸ்லிம் சட்டமானது உள்ளூர் முஸ்லிம்களின் பழக்க மரபுகள் மற்றும் வழக்காறுகள் என்பவற்றை உள்ளடக்கியிருப்பதுடன், அவை இஸ்லாமிய சட்டவியல் முறைமையினது பாகமொன்றாக ஆகமாட்டாது.

   மேலுள்ள கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? பொருத்தமான தீர்ப்புச் சட்டங்களை சுட்டிக்காட்டி உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(ஆ) பிரபல வர்த்தகனொருவனான ஆஸாத் என்பவன் 2011ஆம் ஆண்டில் பஹ்மியா என்பவளைத் திருமணஞ் செய்தான். 2015ஆம் ஆண்டில் ஷோபியா என்பவளுடன் திருமணத்துக்கு வெளியிலான உறவொன்றை ஆஸாத் தொடங்குவரை, அவர்களது திருமணம் மகிழ்ச்சியானதொன்றாகவே இருந்தது. ஆஸாத் கொண்டுள்ள திருமணத்துக்கு வெளியிலான உறவுமுறையானது பஹ்மியாவுக்குத் தெரியவந்ததுடன், விவாகரத்துக் கோரி காதி நீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்றினையும் தாக்கல் செய்தாள். ஆயினும், கிறிஸ்தவ மதத்துக்கு ஆஸாத் மதம் மாறியதுடன், பொதுத்திருமணச் சட்டத்தின் கீழ் ஷோபியாவைத் திருமணஞ்செய்தான். அதன் பின்னர், காதி நீதிமன்றத்திடமிருந்து விவாகரத்தொன்றைப் பெறாமல் ஆஸாத் இரண்டாவது திருமணத்தைச் செய்திருப்பதாகத் தெரிவித்து பொலிஸ் முறைப்பாடொன்றை பஹ்மியா செய்கின்றாள்.

பின்வருவன தொடர்பாக உமது ஆலோசனையை ஆஸாத் நாடுகின்றான்:

(i) இரண்டாவது திருமணத்தின் வலிதுடைமை;

(ii) கணவனின் இரண்டாவது திருமணம் தொடர்பாக ஒரு முஸ்லிம் மனைவியால் செய்யப்பட்டுள்ள பொலிஸ் முறைப்பாட்டின் வலிதுடைமை.

ஆஸாத்திற்கு ஆலோசனை கூறுக.

6. செல்வராஜ் என்பவன் யாழ்ப்பாணத்தில் பரம்பரையாக வாழ்ந்துவருகின்ற பெற்றோருக்கு அங்கேயே பிறந்தவனாவான். சாதனி என்பவளை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சந்தித்ததுடன், அவர்களிருவரும் காதல் வயப்பட்டனர். கண்டியப் பெற்றோர் இருவரினதும் ஒரேயொரு பிள்ளையே சாதனி ஆவாள். பட்டம் பெற்றதன் பின்னர், செல்வராஜுக்கும் சாதனிக்கும் கொழும்பில் ஆசிரியத் தொழில் கிடைக்கின்றது. சில ஆண்டுகளுக்குப் பின்னர், பொதுவான திருமணக் கட்டளைச் சட்டத்தின்கீழ் அவர்கள் கண்டியில் திருமணஞ் செய்கின்றனர். திருமணத்துக்குப் பின்னர் தெஹிவலையில் வீடொன்றை வாடகைக்கு எடுத்தனர். இக்காலப்பகுதியில் செல்வராஜும் சாதனியும் செல்வராஜின் பெற்றோரை வழக்கமாகச் சென்று பார்த்து வந்ததுடன், அவனுடைய சகோதரனுடன் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் அசையா ஆதன வியாபாரத்தில் செல்வராஜ் முதலீடும் செய்தான். அண்மையில், பத்து மில்லியன் ரூபாய் பெறுமதியான யாழ்ப்பாணத்திலுள்ள விவசாயக் காணியொன்றை அவர்கள் கூட்டுச்சொந்தக் காரர்களாகக் கொள்வனவு செய்வதற்கு செல்வராஜின் சகோதரன் ஆலோசனை கூறுகின்றான்.

இறுதிவிருப்பவணமின்றிய நிலையில் தனது ஆதனங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதில் ஏற்புடையதான சட்டத்தை தெரிந்துகொள்வதற்கு செல்வராஜ் விரும்புகின்றான். அத்துடன், அவனுடைய மனைவி சாதனிக்கு எத்தகைய தாக்கங்கள் இதனால் ஏற்படலாம் என்பதனையும் செல்வராஜ் தெரிந்துகொள்ள விரும்புகிறான்.

செல்வராஜுக்கும் சாதனிக்கும் ஆலோசனை கூறுக. உமது விடையானது பொருத்தமான நியதிச்சட்டத்தாலும் தீர்ப்புச் சட்ட அதிகார ஆதாரங்களாலும் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

7. சீதா என்பவள் கண்டியப் பெற்றோருக்கு 1960ஆம் ஆண்டில் பிறந்திருந்தாள். அவள் தனது ஆரம்பக் கல்வியையும் இடைநிலைக் கல்வியையும் கண்டியில் பெற்றதன் பின்னர், தொழில் வாய்ப்புக்காக கொழும்புக்குச் சென்றாள். கொழும்பிலுள்ள கம்பனியொன்றில் அவள் வேலைசெய்து கொண்டிருக்கும் போது, சரத் என்பவனைச் சந்தித்தாள். சரத்தின் பெற்றோர் பேராதனையில் வசிப்பதுடன், கண்டிய மற்றும் கண்டியரல்லாத பெற்றோருக்குப் பிறந்த பிள்ளையே சரத் ஆவான். அவனது தந்தை காலியைப் பூர்வீகமாகக் கொண்டவரென்பதுடன், சரத்தின் தாயை 1948ஆம் ஆண்டில் 'பின்ன' முறையில் திருமணஞ் செய்திருந்தார். அவள் கண்டிய செல்வந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரேயொரு பெண்பிள்ளையாவாள். 1985ஆம் ஆண்டு சரத்தும் சீதாவும் கண்டியச் சட்டத்தின் கீழ் திருமணஞ் செய்துகொண்டனர். அவர்களது திருமணமானது வலிதற்றதாகும் என்று சட்டத்துறை மாணவனொருவனான அமல் அண்மையில் சரத்துக்கு சொல்லுகின்றான். சரத் கண்டியர் ஒருவனல்ல என்பது அமலுடைய வாதமென்பதுடன், சரத்தும் சீதாவும் தமது திருமணத்தைப் பதிவுசெய்ய முடியாமல் போனதுடன், கண்டியர் திருமணச் சட்டத்தின்கீழ் சடங்குமுறைப் படுத்தியிருந்தனர்.

மேலுள்ள நிகழ்வுகளைக் கவனத்திற்கொண்டு, அவர்களது திருமணத்தின் சட்டமுறையாந்தன்மை தொடர்பாக சீதாவுக்கும் சரத்துக்கும் ஆலோசனை கூறுக. உமது விடையானது நியதிச்சட்ட மற்றும் தீர்ப்புச் சட்ட அதிகார ஆதாரங்களால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

************